திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவர்வர்களே, குழந்தைகள் காப்பகத்திற்கு எவ்வளவு தொகை அனுமதிக்கப் படுகிறது? வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள மக்களுடைய குழந்தைகளுக்குப் போதுமான சத்துணவு கொடுக்க வேண்டியதற்காக ஒதுக்கப்படும் தொகை அதிகரிக்கப்படுமா? என்னுடைய தொகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் கிடையாது. இப்பொழுது மாதம் மும்மாரி பொழிவதில்லை. ஆகவே, விவசாயம் செய்யக்கூட முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, குளத்தூர் தொகுதியில் உள்ள பெரும்பகுதி மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் சரியான வகையில் சத்துணவு இன்றி, கூம்பிப்போய், மெலிந்து போய் உள்ளதால் அங்கே குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு, மாவட்ட சமூக நல அலுவலருக்கு ஆலோசனை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உதவித்தொகை அளிப்பதைக் கூட்ட வேண்டுமென்று கூறினார்கள். சத்துணவு போதாத நிலையில் இருக்கிறது, ஆகவே உதவித்தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். அது பரிசீலிக்கப்படும்.

காலநடை பராமரிப்புத்துறை மூலம் ஒருங்கிணைந்த ஆவின இனப்

பெருக்கத் திட்டம்.

* வினா எண் 770—திரு எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் ஒருங்கிணைந்த ஆவின இனப்பெருக்கத் திட்டம் எந்த ஆண்டு முதல் செயல் படுகிறது?

(ஆ) எங்கே செயல்படுகிறது?

(இ) இத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கால் நடைகள், காளைகள், பசுக்கள் எத்தனை? (ஆண்டு வாரியாக)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படவில்லை.

(ஆ) மற்றும்(இ) எழவில்லை.